

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 17.05.2026

# மோசடித் தேர்வுக்கு முற்றுப்புள்ளி எப்போது?

'நீட்' தேர்வு என்றாலே மோசடித் தேர்வுதான். அந்தத் தேர்வு தொடங்கிய காலம் முதல் ஒவ்வொரு ஆண்டும் மோசடி நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் இந்த மோசடித் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்காமல் அதனைத் தகுதித் தேர்வாகக் காட்டிக் கொண்டு இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இளங்கலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு மே - 3 ஆம் தேதி நாடு முழுவதும் நடத்தப்பட்டது. 22.79 லட்சம் மாணவர்கள் இத்தேர்வை எழுதினார்கள். இந்தத் தேர்வையே தேசிய தேர்வு முகமை ரத்து செய்துள்ளது. மறுதேர்வு நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கி இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான மாணவர்களை இது அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

எதற்காகத் தேர்வை ரத்து செய்தார்கள்? கேள்வித்தாள் கசிந்துவிட்டதாகச் சொல்லி ரத்து செய்துள்ளார்கள். ஒரு தேர்வைக் கூட ஒழுங்காக நடத்தத் தெரியாதவர்கள்தான் இவர்கள். 'நீட்' தேர்வு கேள்வித்தாள் கசிவது இது முதல் முறையல்ல. பல முறை கசிந்துள்ளது.

- ✶ 2016-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நீட் தேர்விலும் வினாத்தாள் கசிந்தது.
- ✶ 2017-ஆம் ஆண்டில் ஆள்மாறாட்டப் புகார்கள் எழுந்தன.
- ✶ 2020 ஆம் ஆண்டில் உரிய மாணவர்களுக்கு பதிலாகப் போலித் தேர்வர்கள் தேர்வெழுதினர்.
- ✶ 2021 ஆம் ஆண்டிலும் போலித் தேர்வர்கள் தேர்வு எழுதினார்கள்.
- ✶ 2022-ஆம் ஆண்டில் ஆள்மாறாட்டம் நடந்த புகாரில் பலரும் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டனர்.

2024-ஆம் ஆண்டு 'நீட்' தேர்வில் பலருக்கும் போனஸ் மதிப்பெண் வழங்கப்பட்டது. 30 லட்சம் ரூபாய் முதல் 50 லட்சம் ரூபாய் வரை செலுத்தி வினாத்தாளை 155 மாணவர்கள் பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த வரிசையில் இப்போதும் கேள்வித்தாள் கசிந்துள்ளது.

**நீட் தேர்வு கசிவு விவகாரத்தில் ராஜஸ்தானைச் சேர்ந்த பா.ஜ.க. இளைஞரணிச் செயலாளர் தினேஷ் பின்வாலும் அவரது சகோதரர் மன்கிலால் பின்வாலும் சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் முக்கியமான பா.ஜ.க. தலைவர்களுடன் புகைப்படம் எடுத்து தனது வீட்டில் மாட்டி வைத்துள்ளார்கள். இவர்கள் குடும்பத்தில் கடந்த ஆண்டு மட்டும் நான்கு பேர் நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்த ஆண்டு தினேஷ் பின்வாலின் மகன் நீட் தேர்வு எழுதி இருக்கிறார்.**

ராஜஸ்தான் மாநிலம் சிகாரில் இருந்து 'நீட்' வினாத்தாள் கசிந்துள்ளது. மாணவர்கள் மத்தியில் தேர்வுக்கு முன்னதாகப் பரவிய 410 கேள்விகள் கொண்ட கேள்வித்தாளில் 120 கேள்விகள் நீட் தேர்வில் அப்படியே கேட்கப்பட்டு இருந்தது. இதனை ராஜஸ்தான் காவல் துறை கண்டுபிடித்தது. ஏற்கனவே இது சி.பி.ஐ. தரப்பால் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கு என்பதால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பா.ஜ.க. பிரமுகர் உள்பட 5 பேரை சி.பி.ஐ. கைது செய்துள்ளது. ராஜஸ்தான் காவல் துறை இதுவரை 150 பேரைப் பிடித்து விசாரித்துள்ளது. அதில் சந்தேகத்துக்கு இடமான 20 பேரை சி.பி.ஐ. வசம் ஒப்படைத்துள்ளது.

கேரளாவில் எம்.பி.பி.எஸ். படிக்கும் ராஜஸ்தான் மாணவருக்கு முதலில் இந்த கேள்வித்தாள் கிடைத்துள்ளது. அவர் மூலமாக ராஜஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2 முதல் 5 லட்சம் ரூபாய்க்கு இது விற்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் நாசிக்கில் இது அச்சிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உத்தரகாண்டிலும் கேள்வித்தாள் கசிந்துள்ளது. புனேவில் ஒரு பெண் கைது செய்யப்பட்டு சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வாய் மட்டும் பேசுகிறார் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான். கடந்த 10 ஆண்டு காலத்தில் பல்வேறு தேர்வுகளில் 89 தேர்வுத் தாள் கசிவுகள் நடந்துள்ளன. 48 முறை மறு தேர்வுகள் நடந்துள்ளது. இதுதான் தர்மேந்திரரின் சாதனை ஆகும். ஒரு தேர்வைக் கூட ஒழுங்காக, சர்ச்சைக்கு இடமில்லாத வகையில், புகார் எழாத வகையில் அவரால் நடத்த முடியவில்லை. 'தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்' என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

**எதற்காக இந்த மோசடித் தேர்வைக் கட்டி அழுகிறார்கள்? தனியார் கோச்சிங் சென்டர்களின் நன்மைக்காக மட்டும் தான். ஆண்டுதோறும் பல்லாயிரம் கோடி ரூபாய் பணம் புரளும் வர்த்தகமாக இருக்கின்றன கோச்சிங் சென்டர்கள். அதனால் லாபம் கொழிக்கும் சக்திகள் தான் இந்த நீட் தேர்வை ரத்து செய்து விடாமல் பார்த்துக் கொள்கின்றன. கோச்சிங் சென்டர்களுக்குப் போட்டியாக கேள்வித் தாள் விற்கும் புரோக்கர்கள் பெருகிவிட்டார்கள்.**

**ராஜஸ்தானில் பா.ஜ.க. ஆட்சியில் இருக்கிறது. ராஜஸ்தானின் கோட்டா, சிகார் நகரங்களில்தான் இது போன்ற கோச்சிங் சென்டர்கள் அதிகம் இருக்கின்றன. இவர்கள் கோச்சிங்கும் கொடுக்கிறார்கள். இதுபோல கேள்வித்தாள்களை வாங்கியும் கொடுக்கிறார்கள். இவை அனைத்துமே வட மாநிலங்களில் தான் அதிகம் நடக்கிறது. தென் மாநிலங்களில் நடப்பது இல்லை. தேர்வுச் சதிகளில் உன்னிப்பாக இதனையும் கவனிக்க வேண்டும்.**

"தொடக்கம் முதலே ஏழை, கிராமப்புற, அரசுப்பள்ளி, தமிழ்வழி பயின்ற, சமூகரீதியாகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு எதிரானதாக 'நீட்' தேர்வு இருந்து வருகிறது. பல லட்சம் ரூபாய் செலவழித்துப் பெறும் சிறப்புப் பயிற்சி இன்றி 'நீட்' தேர்வில் வெற்றி என்பது சாத்தியமில்லை என்ற நிலை உருவாகி உள்ளது.

கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, குறிப்பாக முதல் தலைமுறையாகப் பயிலும் மாணவர்களுக்கு 'நீட்' ஒரு பெரும் தடைக்கல்லாகி இருக்கிறது. அவர்கள் மாநிலப் பாடத்திட்டத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றும் CBSE பாடத்திட்டத்துக்குச் சாதகமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் 'நீட்' தேர்வில் கோச்சிங் இல்லாமல் போட்டி போட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்பதை பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

"2026-27 கல்வியாண்டுக்கான 'நீட்' தேர்வினை ரத்து செய்து, பள்ளிப் பொதுத்தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மாநில அரசுகளே மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களை நிரப்ப அனுமதிக்க வேண்டும்" என்றும் கோரிக்கை வைத்துள்ளார் தி.மு.க. தலைவர்.

**ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்வு முறையையே ரத்து செய்தாக வேண்டும். மோசடித் தேர்வுக்கு முதலில் முற்றுப்புள்ளி வையுங்கள்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தனது பிறந்த நாளையொட்டி குடும்பத்தினருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளார்.

## பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலை உயர்வு:

# சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறி!

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மே 17–

ஒன்றிய பா.ஜ.க. அரசு பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலையை உயர்த்தியதற்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், இந்த விலை உயர்வால் சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக் குறியாகப் போகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:



**மக்களின் தலையில் அடுத்தடுத்து பாரத்தைப் போடுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**ஏற்கெனவே வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலையை உயர்த்தியதால் அனைத்துப் பொருட்களின் விலையும் ஏறி விட்டது.**

**இந்நிலையில், இன்று அறிவிக்கப் பட்டிருக்கும் பெட்ரோல், டீசல், CNG விலை உயர்வால் சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக் குறியாகப் போகிறது.**

**இதில் இருந்து மக்களை எப்படிக் காக்கப் போகிறது ஒன்றிய அரசு?**

இவ்வாறு அவர் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திருச்சி மேற்கு தொகுதியில் வாக்காளர்களுக்கு

# முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு நன்றி தெரிவித்தார்!

## பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!

*திருச்சி, மே 17-*

*திருச்சி மேற்கு தொகுதி வாக்காளர்களுக்கு நேரில் சென்று நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்த சட்டமன்ற உறுப்பினர் கே.என். நேரு அவர்கள்!*

திருச்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக முதன்மைச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்றத் துணைத் தலைவருமான கே.என்.நேரு தனது தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர்களை நேரில் சந்தித்து நெகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றதற்கு காரணமான வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக 51, 52, 53, 54, 55 மற்றும் 56 ஆகிய வார்டுக்கு உட்பட்ட பீமநகர் செடல் மாரியம்மன் கோவில், கூனி பஜார்,

மார்சிங் பேட்டை, அந்தோணியார் கோவில் தெரு, கான்வென்ட் ரோடு, மேலப்புதூர், தலைமை தபால் நிலையம், முத்தரையர் சிலை, ராஜா காலனி, பெரிய மிளகு பாறை, கருமண்டபம், ராம்ஜி நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று சட்டமன்ற உறுப்பினர் கே.என். நேரு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அமைச்சர் வந்த வழிநெடுகிலும் பொதுமக்கள், பெண்கள் மற்றும் முதியவர்கள் திரண்டு வந்து அவருக்கு மலர் தூவியும், பொன்னாடைகள் அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தன்னை வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்த சட்டமன்ற உறுப்பினர், தொகுதி மக்களின் கோரிக்கைகளைத் தொடர்ந்து நிறைவேற்றி, திருச்சி மேற்கு தொகுதியை தமிழகத்தின் முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன் என உறுதி அளித்தார்.

இந்த நிகழ்வில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ், வழக்கறிஞர்கள் ஓம் பிரகாஷ், பாஸ்கர், பகுதிச் செயலாளர் மோகன்தாஸ், கோட்ட தலைவர் துர்கா தேவி, மாமன்ற உறுப்பினர் கமால் முஸ்தபா உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு. எம்.எல்.ஏ., உரையாற்றினார். உடன் முன்னாள் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், கோ.கண்ணன், இரா.ராஜசேகர், ஆர். சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், கே.வி.ராஜ்குமார், ஆர். வேல்முருகன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார் எம்.எல்.ஏ., ஓ.ஜோதி, எஸ்.பன்னீர்செல்வம், ந.பாண்டுரங்கன், டி.ஏ.தட்சணாமூர்த்தி, க.லோகநாதன், ஜெயராணிரவி, க.சௌந்தரராசன், விஜயலட்சுமிரமேஷ், ப.கார்த்திவேல்மாறன் உட்பட கழகத்தினர் உள்ளனர்.